# West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை

## SEN ஆதரவு



west sussex county council

## வழக்கமான பள்ளிகளில் SEN ஆதரவு

சிறப்புக் கல்வித் தேவைகள் (SEN) கொண்ட குழந்தைகளுக்கு வழக்கமான பள்ளிகள் அளிக்க வேண்டிய ஆதரவைப் பற்றிய தகவல்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

**SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

குழந்தைகள் மேம்பாடு அடைவதற்கு தேவையான கல்வியைப் பெறுவது எல்லா குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கு உரிய உரிமையாகும், கல்வியின் மூலமே அவர்கள்:

- தங்கள் சிறப்புநிலையை அடைவார்கள்
- முழுமையான வாழ்வை வாழக்கூடிய நம்பிக்கை நிறைந்தவர்களாக மாறுவார்கள் மற்றும்
- வேலை, மேற்படிப்பு அல்லது பயிற்சியைப் பெறுவதற்கு தகுதிவாய்ந்த வளர்ந்தவர்களாக வெற்றிகரமாக மாற்றமடைவார்கள்

## SEN உதவிகளை வழங்குவதில் பள்ளிகளின் கடமைகள்

**SEND நடைமுறை விதிகளின்படி** எல்லா பள்ளிகளும் **கண்டிப்பாக**:

- SEN கொண்டிருக்கும் குழந்தைக்குத் தேவையான வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய தங்கள் **மிகச்சிறந்த முயற்சிகளை** செய்தாக வேண்டும் – இதன் பொருள், குழந்தைகள் அல்லது இளம்பருவத்தினரின் SEN ஐ நிறைவேற்ற தேவையான எல்லாவற்றையும் செய்வதாகும்
- SEN கொண்டுள்ள குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் SEN கொண்டிராத மாணவர்களுக்கான செயல்பாடுகளிலும் ஈடுபடுவதை உறுதிசெய்ய வேண்டும்
- SEN வழங்குதலை ஒருங்கிணைப்பதற்கு, பொறுப்பாக ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டும் –SEN ஒருங்கிணைப்பாளர், அல்லது (SENCo)
- ஒரு குழந்தைக்கு சிறப்புக் கல்வித் தேவைகளை வழங்கும்போது, பெற்றோருக்குத் தெரிவிக்க வேண்டும்

- SEN தகவல் அறிக்கையை வெளியிட வேண்டும், மேலும் ஊனமுற்ற குழந்தைகளை சேர்த்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள், ஊனமுற்ற குழந்தைகளுக்கு மற்றவர்களுக்குத் தருவதைவிட குறைவான ஈடுபாட்டை அளித்து நடத்துவதைத் தவிர்க்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், ஊனமுற்ற குழந்தைகள் பள்ளியை அணுகுவதற்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் மற்றும் அவர்களுக்கான அணுகலை காலப்போக்கில் எப்படி மேம்படுத்த திட்டமிட்டுள்ளனர் என்பதைக் காண்பிக்கும் அணுகல்தன்மை திட்டம் ஆகியவற்றையும் வெளியிட வேண்டும்

## SEN ஆதரவு என்பது என்ன?

சிறப்புக் கல்வித் தேவைகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள ஒவ்வொரு குழந்தையும் **SEN ஆதரவைப்** பெற வேண்டும். இதன் பொருள் இவர்களுடைய வயதில் உள்ள மற்ற குழந்தைகளுக்குப் பொதுவாக வழங்கப்படும் ஆதரவுடன் கூடுதலாக அல்லது வேறுபட்டதாக தேவைப்படும் உதவி என்பதாகும்.

SEN ஆதரவின் நோக்கம், பள்ளியால் இவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள **அடைதல் இலக்குகள்** அல்லது கற்றல் இலக்குகளை குழந்தைகள் எட்டுவதற்கு உதவுவதாகும். இந்தச் செயல்முறையில் பள்ளிகள் பெற்றோரையும் ஈடுபடுத்த வேண்டும்.

பள்ளியில் தரப்படும் SEN வசதிகளைப் பற்றி, ஒவ்வொரு பள்ளியும் **SEN தகவல் அறிக்கையை** வெளியிட வேண்டும். இதை நீங்கள் பள்ளியின் இணையதளத்தில் காணலாம். குறிப்பிட்ட பள்ளியில் தரப்படும் SEN வசதிகளைப் பற்றிய விவரங்களை, உங்கள் குழந்தையின் ஆசிரியர் அல்லது பள்ளிக்கான சிறப்புக் கல்வித் தேவைகளுக்கான ஒருங்கிணைப்பாளரிடமும் நீங்கள் கேட்கலாம்.

எல்லா குழந்தைகளுக்கும், SEN அல்லது குறைபாடுகள் கொண்ட குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கும் தொடக்க நிலைச் சூழல்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் எந்த வகையான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பது வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டி கவுன்சிலின் **உள்ளூர் நிர்வாகச் செய்தி** வெளியீட்டிலும் வரையறுக்கப்பட்டுள்ளது. SEN ஆதரவுக்கான நிதி உதவிகளைப் பற்றி, இங்கே அறியலாம்: **westsussex.local-offer.org**

SEN ஆதரவு பல்வேறு வடிவங்களில் தரப்படலாம், அதில் பின்வருவனவும் அடங்கும்:

- உங்கள் குழந்தைக்கான சிறப்புக் கல்வித் திட்டம்
- ஆசிரியர் அல்லது கற்றல் உதவியாளரிடமிருந்து கூடுதல் உதவி
- கற்றல் பொருட்கள் அல்லது உபகரணங்களை உருவாக்குதல் அல்லது மாற்றுதல்
- சிறு குழுவாக உங்கள் குழந்தையுடன் சேர்ந்து செயல்படுதல்
- வகுப்பில் அல்லது இடைவேளைகளில் உங்கள் குழந்தையை கண்காணித்தல் மற்றும் அவற்றைப் பதிவுசெய்து வைத்தல்
- வகுப்பின் செயல்பாடுகளில் பங்கேற்பதற்கு உங்கள் குழந்தைக்கு உதவுதல்
- கேள்விகள் கேட்க ஊக்கப்படுத்துவது மற்றும் கடினமான விஷயங்களை முயற்சி செய்ய ஊக்கப்படுத்துவது மூலம் குழந்தை புரிந்து கொள்வதை உறுதிப்படுத்தல்
- மற்ற குழந்தைகள் உங்கள் குழந்தையுடன் சேர்ந்து செயல்பட அல்லது இடைவேளைகளில் ஒன்றாக விளையாட உதவுதல்
- உடல்பூர்வ அல்லது தனிப்பட்ட கவனிப்புகளில் உங்கள் குழந்தைக்கு ஆதரவளித்தல், அதாவது உண்ணுதல், பள்ளியில் பாதுகாப்பாக உலவுதல், கழிவறையைப் பயன்படுத்தல் அல்லது ஆடை அணிதல் போன்றவற்றில் உதவுதல்.

**SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

மேல்நிலை தலைமைக்குழுவின் ஆதரவுடன், வகுப்பு மற்றும் பாட ஆசிரியர்கள், எல்லா மாணவர்களின் மேம்பாட்டைப் பற்றியும் வழக்கமான மதிப்பீடுகளைச் செய்ய வேண்டும். தங்கள் வயது மற்றும் தனிப்பட்ட சூழ்நிலைகளின்படி எதிர்பார்க்கப்படும் மேம்பாட்டை விடக் குறைவான மேம்பாட்டை அடைந்திருக்கும் மாணவர்களில் இதிலிருந்து கண்டறிய வேண்டும்.

பிறகு குழந்தைக்கு SEN ஆதரவு தேவையா என்பதை பள்ளி தீர்மானிக்க வேண்டும். இதைப் பற்றி பள்ளி உங்களிடமும் உங்கள் குழந்தையிடமும் பேச வேண்டும். ஒரு இளம்பருவத்தினரின் வயது 16 அல்லது அதை விட அதிகமானதாக இருந்தால், பள்ளி அவர்களை நேரடியாக ஈடுபடுத்தலாம்.

சில நேரங்களில் உங்கள் குழந்தைக்கு சிறப்புக் கல்வித் தேவைகள் இருப்பதை அறிந்து கொள்ளும் முதல் நபராக நீங்களே இருப்பீர்கள். உங்கள் குழந்தைக்கு SEN ஆதரவு தேவைப்படலாம் என்று நீங்கள் நினைத்தால், உங்கள் குழந்தையின் ஆசிரியர் அல்லது சிறப்புக் கல்வித் தேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் அதைப்பற்றி பேச வேண்டும்.

உங்கள் குழந்தைப் பெற்று வரும் ஆதரவில் உங்களுக்குத் திருப்தியில்லை என்றால், சிறப்புக் கல்வித் தேவைகள் ஒருங்கிணைப்பாளர் அல்லது தலைமை ஆசிரியரிடம் பேசுவதற்குக்கு கேட்கலாம். கைப்பிரதியின் இறுதியில் தரப்பட்டுள்ள **கூடுதல் விவரங்கள், ஆலோசனை அல்லது ஆதரவை நான் எங்கே பெறுவது?** என்பதிலும் நீங்கள் மேலும் விவரங்களை அறியலாம்.

# படிப்படியான அணுகுமுறை

**SEND நடைமுறை விதிகள்** கூறுவது

- ஒரு மாணவருக்கு SEN இருப்பதாக அடையாளம் காணப்பட்டால், அவருக்கு கற்றலுக்கு இருக்கும் தடைகளை அகற்றுவதற்கு பள்ளியானது நடவடிக்கை எடுக்க வேண்டும், மேலும் செயல்திறமிக்க சிறப்புக் கல்வித் ஏற்பாடுகளை செய்தாக வேண்டும்.

உங்கள் குழந்தைக்கு SEN இருப்பதாக அடையாளம் காணப்படும்போது, பள்ளியானது பின்வரும் நான்கு படிகளின் அடிப்படையில் படிப்படியான அணுகுமுறையைப் பயன்படுத்த வேண்டும். அவையாவன:




| | |
|---|---|
| **மதிப்பிடல்** | **திட்டம்** |
| **மதிப்பிடல்** | **செயல்படல்** |

**மதிப்பிடல்**

கற்பிக்கும் ஊழியர்கள், சிறப்புக் கல்வித் தேவைகள் ஒருங்கிணைப்பாளருடன் சேர்ந்து, உங்கள் குழந்தையின் தேவைகளை மதிப்பிட வேண்டும், இதன் மூலம் அவர்கள் சரியான ஆதரவை வழங்க முடியும். இதில் உங்களையும் அவர்கள் ஈடுபடுத்த வேண்டும், சாத்தியமான இடங்களில், குழந்தையின் எண்ணங்களையும் அறிய வேண்டும்.

**SEND நடைமுறை விதிகள்** கூறுவது:

பெற்றோர்களின் எந்தவொரு கவலையையும் பள்ளிகள் முக்கியமானதாகக் கருத வேண்டும்.

சில நேரங்களில் பள்ளிகள் ஒரு நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர் அல்லது உடல்நல கவனிப்பாளரிடம் ஆலோசனை பெறக் கூடும்.
இதைப் பற்றி அவர்கள் முதலில் உங்களிடம் பேச வேண்டும்.

**திட்டம்**

உங்கள் குழந்தைக்கு SEN ஆதரவு தேவை என்று பள்ளி, தீர்மானிக்குமானால், அவர்கள் **கண்டிப்பாக** அதை உங்களிடம் தெரிவிக்க வேண்டும். அமைக்கப்படவிருக்கும் இலக்குகள், வழங்கப்படவிருக்கும் உதவிகள் ஆகியவைப் பற்றி அவர்கள் உங்களுடன் பேசி, மேம்பாட்டை மதிப்பாய்வு செய்வதற்கான ஒரு தேதியையும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

**செயல்படல்**

உங்கள் குழந்தையுடன் செய்யப்படும் எல்லா செயல்பாடுகளுக்கும் உங்கள் குழந்தையின் வகுப்பு அல்லது பாட ஆசிரியரே பொதுவாகப் பொறுப்பாக இருப்பார், மேலும் அவரே இதில் ஈடுபடக்கூடிய ஏதேனும் கற்பித்தல் உதவியாளர்கள் அல்லது நிபுணர்களுடன் இணைந்து செயல்படுவார். உங்கள் குழந்தைப் பெறக்கூடிய ஆதரவுக்கு பொறுப்பானவர் யார் என்பதை பள்ளி உங்களிடம் தெரிவிக்க வேண்டும்.

உங்கள் குழந்தையுடன் செயலாற்றும் அனைவரும் பின்வருவனவற்றை அறிந்திருக்க வேண்டும்:

குழந்தையின் தேவைகள், எதிர்பார்க்கப்படும் பலன்கள், வழங்கப்படும் ஆதரவு மற்றும் தேவையான ஏதேனும் கற்பித்தல் உத்திகள் அல்லது அணுகுமுறைகள்.

**மதிப்பாய்வு**

திட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தேதியில், பள்ளியானது உங்கள் குழந்தையின் மேம்பாட்டையும் குழந்தை பெற்ற உதவியால் பெறப்பட்ட வேறுபாட்டையும் மதிப்பாய்வு செய்ய வேண்டும். மதிப்பாய்வு செயல்பாட்டிலும் அடுத்த செயல்பாட்டைத் திட்டமிடுவதிலும் நீங்களும் உங்கள் குழந்தையும் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

**SEND நடைமுறை விதிகள்** கூறுவது

வருடத்தில் மூன்று முறைகளாவது பள்ளிகள் பெற்றோரைச் சந்திக்க வேண்டும்.

கூடுதல் மதிப்பீட்டுக்கு அல்லது அடுத்த படிகளைத் திட்டமிடுவதில் உதவுவதற்கு சில நேரங்களில் மற்ற நிபுணர்களை இதில் ஈடுபடுத்துவது உதவக்கூடும். உங்கள் குழந்தை கணிசமான மேம்பாடு எதையும் பெறவில்லை என்றால், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை பள்ளியுடன் சேர்ந்து ஒப்புக் கொள்வது முக்கியமானதாகும்.

உங்கள் குழந்தையின் இலக்குகளை எட்டுவதற்கு உதவக்கூடிய என்ன வகையான ஆதரவு கிடைக்கிறது என்று அறிய நீங்களும் பள்ளியும் **உள்ளூர் நிர்வாகச் செய்தியைப்** பார்க்கலாம்.

## கூடுதல் தகவல்கள், ஆலோசனை அல்லது ஆதரவை நான் எங்கே பெறுவது?

SEN ஆதரவைப் பற்றி பின்வரும் இடங்களில் மேலும் அறியலாம்:

- பள்ளி இணையதளத்தில் SEN தகவல் அறிக்கையைக் காணுதல்
- குழந்தையின் ஆசிரியர் அல்லது சிறப்புக் கல்வித் தேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் பேசுதல்
- **உள்ளூர் நல்கைகள் என்ன என்று** காணுதல்
- **SEND நடைமுறை விதிகளைப்** படித்தல்

West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையையும் (WS SEND IAS) நீங்கள் தொடர்பு கொள்ளலாம், அவர்கள் பின்வரும் தகவல்களை வழங்குவார்கள்:

- SEN நிதியுதவி பற்றிய தகவல்கள் உட்பட, SEN ஆதரவைப் பற்றிய தகவல்கள்
- உங்கள் பள்ளி வழங்கும் ஆதரவில் உங்களுக்கு திருப்தியில்லை என்றால் என்ன செய்வது என்பது தொடர்பான ஆலோசனை

- உதவக் கூடிய மற்ற நிறுவனங்கள், உதவிக் குழுக்கள் மற்றும் தகவல் சேவைகளைப் பற்றிய தகவல்கள்
- **EHC தேவைகள் மதிப்பீட்டைக்** கோருவதற்கான உங்கள் உரிமைகள் பற்றிய தகவல்கள் மற்றும் ஆலோசனை.

## எங்களைத் தொடர்பு கொள்ள

**உதவி எண்:**
0330 222 8555

**அஞ்சல் முகவரி:**

SEND Information, Advice and Support Service

St James

Campus St

James Road

Chichester

West Sussex

PO19 7HA

**மின்னஞ்சல் முகவரி:** send.ias@westsussex.gov.uk

**எங்கள்  இணையதளங்களையும் நீங்கள் பார்க்கலாம்:**

https://westsussex.local-offer.org/services/7

**SEND** = சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும் உடல்குறைபாடு (Special Educational Needs and Disabilities)



எல்லா பெற்றோருக்கும் பாகுபாடற்ற தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் ஆதரவு சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதே WS SEND IAS இன் பங்காகும், இதன் மூலம் பெற்றோர், தங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளைப் பற்றிய தகவல் அறிந்த முடிவுகளை எடுக்க முடியும். பாதிப்பு உடைய குடும்பங்களுக்கு அவர்களுடைய சூழல்களில் உதவக்கூடிய தனிநபர்கள், சேவைகள் அல்லது ஏஜென்சிகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டால் தவிர WS SEND IAS உடன் பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள் ரகசியமாகவே வைக்கப்படும்.

west sussex county council

www.westsussex.gov.uk

WS187(5) 09.15

TAMIL